RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 2 | ஜனவரி.7 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## தென்காசி பிரம்மா கோவிலில் வரும் ஏப்ரல் 9 முதல் 12 வரை நான்கு நாட்கள் கும்பாபிஷேகம்

### கோவில் ஒருங்கிணைப்பாளர் இசக்கி பாண்டியன்

### வழக்கறிஞர் பிரம்மஸ்ரீ சர சந்திரபோஸ் கூட்டாக பேட்டி





தென்காசி, ஜன.07

தென்காசி மாவட்டம் சுந்தர பாண்டியபுரம் அருகே கீழபாட்டாக்குறிச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ பிரம்மலோகம் பிரம்மா திருக்கோவில் பிரம்மாவுக்குரிய ஒரு முக்கியத் தலமாகும், இங்கு பிரம்மா தனது பரிவார மூர்த்திகளுடன் மகா பிரம்மதேவராக சிருஷ்டிக்கப்பட்டுள்ளார்; திருப்பட்டூருக்கு அடுத்தபடியாக இது தமிழகத்தில் பிரம்மாவிற்கான தனித்துவமான கோயில்களில் ஒன்று.இயற்கை எழில் கொஞ்சும் வயல் வழிகள் குளம் ஆகியவற்றின் நடுவே சாலையில்

நல்லிணக்கத்திற்காகவும், சிறப்பு பூஜைகளுக்காகவும் கொண்டாடப்படும் இடமாக கருதப்படுகிறது

பிரம்மாவிற்கான தனி கோயில், பிரம்மா மற்றும் பரிவார மூர்த்திகள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர்.

நல்லிணக்க ஓணம் பண்டிகை மற்றும் புஷ்பாஞ்சலி போன்ற நிகழ்வுகள் இங்கு நடைபெறுகின்றன. புதிய கோயில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம்மகடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் நாள் நடைபெற்று 9 ஆண்டுகள் முடிவடையும் நிலையில் பத்தாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு ஏப்ரல் 9 முதல் 12 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது ஒன்பதாம் தேதி காலை ஆலயத்தில் உள்ள 15 குடும்பங்களுக்கும் தானியங்கள் நிரப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. தென்காசி மாவட்டம்பாட்டா குறிச்சி கிராமம் கீழ பாட்டாகுறிச்சியில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் பிரம்மலோகம் கோவில் வளாகம் உள்ளது சித்தர்கோயில் சத்யம் வதா தர்மம் சரா அத்திதேவோபவ போன்ற நமது வேதகால சனாதான கொள்கைகளின் அடிப்படையில் இந்த கோவில் கட்டப்பட்டுள்ளது பிரம்மலோகத்தில் கதவுகள் இல்லை துவார பாலகர்கள் இல்லை கதவுகளை திறப்பது அல்லது மூடுவது இல்லை உண்டியல்கள் இல்லை ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் திறந்திருக்கும் எந்த வகையான தீண்டாமையும் இங்கே இல்லை பணம் அல்லது மதிப்பு மிக்க நன்கொடைகள் பிரம்மலோகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது பிரமலோகத்தில் பிரம்ம செடிகள் மற்றும் மரங்கள் பிரம்ம நவக்கிரகங்கள் பிரம்ம நாகங்கள் பிரம்ம கணபதி பிரம்மவேல் முருகன் பிரம்ம சபரி அய்யப்பன் பரம ஆஞ்சநேயன் பிரம்ம மகாவிஷ்ணு பிரம்ம மகா சிவன் பிரம்ம மகா சரஸ்வதி பிரம்ம மகாலட்சுமி பிரம்ம மகா சக்தி பரம்பி ம்மமானபஞ் சமுக பிரம்மா என தெய்வங்களை பூசிக்கிறோம் காற்று நிலம் நீர் நெருப்பு ஆகாயம்என ஐம்பூதங்களை காப்பதால் இங்கு உள்ள பிரம்மனுக்கு பஞ்சமுக பிரம்மா என்ற பெயர் பிரம்மலோகத்தின் 9 ஆவது வருஷாவதித்தேன் முக்கியத்தை கருத்தில் கொண்டு நம் பாரத திருநாட்டின் மாண்புமிகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமரை விழா நடக்கும் நான்கு நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் பிரம்மா திருக்கோயில் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் கலந்து கொள்ள அழைக்கிறோம் அதற்கான பணிகள் ஏற்கனவே டெல்லியில் துவங்கி பட்டுள்ளன ஏப்ரல் 9 10 11 மற்றும் 12ஆம் தேதி களில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை தொடர்ந்து நான்கு நாட்கள் அன்னதானம் நடைபெறும் அனைத்து பக்தர்களும் 2026 ஏப்ரல் 9 முதல் 12 வரை நடைபெற்று வரும் பிரமோற்சொத்தில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல பஞ் சமுக பிரம்மாவின் ஆசிகளை பெற அன்போடு அழைக்கிறோம்

தென்காசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோயிலில் பிரம்மாவின் சிற்பங்கள் மற்றும் வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.

திருமலாபுரம் பாறைக்குடைவு கோயில்களிலும் (Rock-Cut Cave Temples) பிரம்மாவின் சிற்பங்களைக் காணலாம், இது பாண்டியர் காலக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சுருக்கமாக, தென்காசியில் பிரம்மாவிற்காகவே பிரத்யேகமாக கட்டப்பட்ட கோயில் ஒன்று கீழபாட்டாக்குறிச்சியில் உள்ளது, இது ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## வெனிசுலாவில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 32 கியூபா அதிகாரிகள் உயிரிழப்பு

ஹவானா, ஜன.7-

வெனிசுலாவில் நடந்த அமெரிக்க ராணுவ நடவடிக்கையின்போது தங்களது நாட்டைச் சேர்ந்த 32 அதிகாரிகள் கொல்லப்பட்டதாக கியூபா அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில்" வெனிசுலா அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் கியூபாவின் ராணுவ மற்றும் காவல் துறை அதிகாரிகள் பல ஆண்டுகளாக அங்கு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் வெனிசுலாவை சுற்றிவளைத்து அமெரிக்கா நடத்திய திடீர் தாக்குதலில் 32 கியூபா அதிகாரிகள் உயிரிழந்தனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் புளோரிடாவிலிருந்து வாஷிங்டனுக்கு ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்த போது செய்தியாளர்களிடம் கூறுகையில், "நேற்று (சனிக்கிழமை) கியூபா மற்றும் வெனிசுலாவைச் சேர்ந்த நிறைய பேர் கொல்லப்பட்டனர் என்பது உங்களுக்கு தெரியும். ஆனால், எங்கள் தரப்பில் எந்த உயிரிழப்பும் இல்லை" என்றார்.

# தமிழகத்தில் பெண்கள் நலனுக்காக ஐ.நா. அமைப்புடன் அரசு ஒப்பந்தம்




சென்னை: ஜன.7-

மாநிலத்தில் பெண்களின் நலன், பாலின சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை வலுப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு, தமிழக அரசு இடையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலத்தில் பெண்களின் நலன், பாலின சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு மற்றும் தமிழக அரசு இடையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு, பொதுத்துறை கண்டுபிடிப்புகளின் கண்காணிப்பகம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் ஆகிய அமைப்புகளுடன் தமிழ்நாடு அரசின் மாநில திட்ட குழுவுக்கும் இடையேயான முத்தரப்பு ஒத்துழைப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் தமிழ்நாடு மாநிலக் குறிக்காட்டி வரையறை 2.0வை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.


மேலும் மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட, சுற்றுச்சூழல் அமைப்புச் சேவைகளின் பொருளாதார மதிப்பீடு தமிழகத்தின் முன்னுரிமை அளிக்கப்பட்ட 61 ஈரநிலங்கள்/ நீர்நிலைகள் பற்றிய ஆய்வு, தமிழக புறநகர் பகுதிகளின் அமைப்பு மற்றும் நிலையான புறநகர் மேலாண்மை கட்டமைப்பை மேம்படுத்துதல், முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரமிடுதல் மீதான மதிப்பீட்டாய்வு, தமிழகத்தின் வளர் இளம் பெண்களிடையே நீடிக்கும் ரத்த சோகை: செயல்பாட்டு இடைவெளிகளும் பாதிப்புகளும் ஆகிய 4 அறிக்கைகளை மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் முதல்வர் ஸ்டாலினிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், துணை முதல்வர் உதயநிதி, தலைமைச்செயலர் நா. முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் சஜ்ஜன்சிங் ரா.சவான், பொருளியல் மற்றும் புள்ளியியல் ஆணையர் ஆர்.ஜெயா, சமூக நலத்துறை செயலர் ஜெயா முரளிதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### வருகின்ற ஜனவரி 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் கோயம்புத்தூர் கொடீசியா வளாகத்தில் நடைபெறவுள்ள

## சர்வதேச ஜவுளி தொழில் மாநாட்டில், காட்சியரங்குகள் அமைக்க விரும்பும் ஜவுளி தொழில் நிறுவனங்கள், வருகின்ற 13.1.2026 ஆம் தேதிக்குள் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரியின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்

### மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்



கோவை, ஜன.7-

தமிழ்நாடு அரசு, துணிநூல் துறை மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) இணைந்து நடத்தும் "International Textile Summit-360" என்ற சர்வதேச ஜவுளி தொழில் மாநாடு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 மற்றும் 30 ஆகிய தினங்களில் கோயம்புத்தூர் கொடீசியா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டிற்குள் USD 1 Trillion பொருளாதார மாநிலமாக மாற்றும் இலக்கை அடைய ஜவுளி தொழில் வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்கும் வகையில் சர்வதேச ஜவுளி தொழில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில், கருத்தரங்குகள் (Conference), கண்காட்சி (Exhibition), வாங்குபவர் மற்றும் விற்பவர் சந்திப்பு (Reverse Buyer Seller Meets) மற்றும் அழகுநயப்பு காட்சி (Fashion Show) ஆகியவை இடம்பெறவுள்ளன.

மேலும், சுமார் 100 காட்சியரங்குகள் கொண்ட கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் காட்சியரங்குகள் அமைக்க விரும்பும் ஜவுளி தொழில் நிறுவனங்கள், வருகின்ற 13.1.2026 ஆம் தேதிக்குள், மதுரை மண்டல துணை இயக்குநர் அலுவலக மின்னஞ்சல் முகவரியான ddtextilesmdu@gmail.com. மூலம் விண்ணப்பிக்கலாம். இந்நிகழ்வில் பங்கேற்பதன் மூலம், வெளிநாட்டு முதலீடு மற்றும் ஏற்றுமதிகள் அதிகரித்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும்.

மேலும், கண்காட்சியில் Spinning, Fabric, Garments, Home Textiles, Integrated Manufacturers, Brands from Tamilnadu, Technical Textiles, Sustainablity and Recycling, Raw Material/ Recycled Textile/ Man Made Fibre ஆகிய காட்சியரங்குகள் பங்குகொள்ள இருப்பதால், ஜவுளித் தொழில் முனைவோர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

எனவே, அனைத்து ஜவுளித் தொழில் நிறுவனங்கள் மற்றும் ஜவுளித் தொழில் சங்கங்கள் சர்வதேச ஜவுளி தொழில் மாநாட்டில் பங்கேற்று பயன்பெறலாம். கூடுதல் விபரங்களுக்கு, மண்டல துணிநூல் துணை இயக்குநர் அலுவலகம், எண்.34 விஸ்வநாதபுரம் மெயின் ரோடு, விஸ்வநாதபுரம், மதுரை 14 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 8220017071 , 8220656182 ஆகிய அலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றலாம் : ஐகோர்ட் அதிரடி உத்தரவு





மதுரை: ஜன.7-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபத் தூணில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு செல்லும். இதனை எதிர்த்த மேல் முறையீட்டு மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன. எனவே, தனி நீதிபதி உத்தரவின்படி திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும். இதை மதுரை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையிட வேண்டும் என்று உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தீர்ப்பளித்துள்ளது.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு, மதுரை மாவட்ட நிர்வாகம், அறநிலையத் துறை, சிக்கந்தர் தர்கா நிர்வாகம் உட்பட 26 மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் அனைத்தையும் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்து வந்தது.

தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில் நேற்று (ஜன.6) தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தனி நீதிபதி உத்தரவு செல்லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, தீபம் ஏற்றுவதற்கான சில வழிகாட்டுதல்களையும் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

நீதிபதிகள் தீர்ப்பின் விவரம் வருமாறு: 1996 நீதிமன்ற உத்தரவில் உச்சிப்பிள்ளையார் கோயிலிலும் மாற்று இடத்திலும் தீபம் ஏற்றலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பை பின்பற்றி தேவஸ்தானம் மலை உச்சியில் உள்ள கல்தூண் எனக் கூறப்படும் தீபத் தூணிலும் தீபம் ஏற்ற வேண்டும். இதற்கு மத்திய தொல்லியல் துறையிடம் உரிய அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் பொது அமைதிக்கு பிரச்சினை ஏற்பட தமிழக அரசே காரணம். தீபத் தூண் விவகாரத்தில் அரசு, அரசியல் காரணங்களோடு செயல்பட்டுள்ளது. தீபத் தூண் தேவஸ்தான இடத்திலேயே உள்ளது. திருப்பரங்குன்றம் மலையில் இருப்பது தீபத் தூண்தான்.

எனவே, தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு செல்லும். மேல் முறையீடு மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன. தனி நீதிபதி உத்தரவுப்படி தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும். இதை மதுரை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையிட வேண்டும்.

ஆனால், தீபத் தூணில் தனிநபர்கள் தீபம் ஏற்ற அனுமதிக்க முடியாது. தேவஸ்தானம், மாவட்ட நிர்வாகம், காவல் துறையினர்தான் தீபம் ஏற்ற வேண்டும்.

தனி நபர்கள், அரசியல் கட்சியினர், அரசியல் இயக்கத்தினர் யாரும் அங்கு தீபம் ஏற்றச் செல்ல கூடாது. தேவஸ்தானம் மட்டுமே செல்ல வேண்டும். ஒவ்வொரு கார்த்திகையிலும் தீபம் ஏற்றுவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்திரவில் கூறியுள்ளனர்.



# தேனி மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சார்பில் நடமாடும் மருத்துவ வாகனம்

தேனி ஜன. 07-

தேனி மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சார்பில் நடமாடும் மருத்துவ வாகனம், REC நிறுவனத்தின் நிதி உதவியோடு தேனி மாவட்டத்தில் இன்று முதல் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவர். செவிலியர். மருந்தாளுநர், உதவியாளர் அடங்கிய மருத்துவ குழுவினர் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுடன் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் மற்றும் பழங்குடியின கிராமங்களில் மருத்துவ சேவையை வழங்கிடும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. நடமாடும் மருத்துவ வாகனத்தின் மருத்துவ சேவையினை தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் .இரஞ்ஜீத் சிங், அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் சேர்மன் மருத்துவர் என்.ஆர்.டி தியாகராஜன் அவர்கள் முன்னிலை வைத்தார். நிகழ்வில் துணைத் தலைவர் வி. மகாராஜன், கௌரவச் செயலாளர் க.சுருளிவேல் பொருளாளர் . எஸ்.முகமது ஷேக் இப்ராஹிம் நிர்வாக செயலாளர் மீனாம்பிகை உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள், ரெட் கிராஸ் ஆயுள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பிறந்தநாள் விழா இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

வத்தலகுண்டுஜன 07-



திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு தெற்கு ஒன்றியம் சார்பாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ பெரியசாமி பிறந்த நாளை முன்னிட்டு இனிப்பு வழங்கி கொண்டாடினர். வத்தலகுண்டு தெற்கு ஒன்றிய செயலாளர் கனிகுமார் தலைமையில் விரிவீடு ஸ்ரீ காளியம்மன் கோவிலில் பூஜை செய்தனர். மேலும் அமைச்சர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் வகையில் பள்ளி மாணவ மாணவியருக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்பு வழங்கினர். மேலும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கியதுடன் போட்டோ கடைகள் சாலையில் செல்பவர்கள் அனைவருக்கும் தமிழக அரசின் சாதனையை எடுத்துரைத்து இனிப்பு வழங்கி ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பிறந்தநாள் கொண்டாடினர். மேலும் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு பொறுப்பாளர்கள், இளைஞரணி மற்றும் மாணவரணி அமைப்பாளர்கள், கிளை பொறுப்பாளர்கள், சார்பணிநிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்..



■ தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஊன்றுகோல் மற்றும் கண் கண்ணாடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங்,அவர்கள் வழங்கினார்.



# ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்தநாள் விழா : பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து கொண்டாட்டம்

நிலக்கோட்டைஜன 07-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ பெரியசாமி பிறந்தநாளை முன்னிட்டு அரசு மருத்துவமனையில் நிலக்கோட்டை மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் கரிகாலபாண்டியன் சார்பில் இன்று பிறந்த குழந்தைகளுக்கு தல 2 கிராம் தங்க மோதிரமும், குழந்தைகளுக்கு பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கி கொண்டாடினர். மேலும் இங்கு சிகிச்சை பெற்று வரும் உள் மற்றும் வெளி நோயாளிகளுக்கு பிரட் பழங்கள் மற்றும் போர்வை உள்ளிட்டவைகளையும் வழங்கினர். இவ்விழாவில் அம்மையநாயக்கனூர் பேரூர் செயலாளர் ராஜாங்கம், சிறுபான்மை அமைப்பாளர் ஜான் போஸ்கோ,ஒன்றிய குழு பொறுப்பாளர்கள் வேல் முருகன் பாலச்சந்தர் செல்வம், செல்வராஜ் சாந்தாமேரி மற்றும் இளைஞர் அணி மலையாளம் , கந்த பிரபு, மாணவர் அணி அமுல்ராஜ், கிளை பொறுப்பாளர்கள் கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# தாம்பரம் மண்டல வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் தொழிற்சங்க பொதுக்குழு கூட்டத்தில் தொழிற்சங்க தலைவர் நாராயணன் திருப்பதி பங்கேற்பு

தாம்பரம் ஜன 7-





செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மண்டல வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் தொழிற்சங்க பொதுக்குழு நடைபெற்றது. இதில் தொழிற்சங்க தலைவரும், பாஜக மாநில தலைமை செய்தி தொடர்பாளர் நாராயணன் திருப்பதி கலந்து கொண்டார். பின்னர் பி.எப். அலுவலகத்தில் அலுவலக பணியாளர்களின் குறைகளை கேட்டு தெரிந்து கொண்டார் பழய கட்டிடம் அலுவலகம் முழுவதும் எலி தொல்லைகள் அதிகமாக இருக்கிறது உக்காரரவும் உணவருந்து கூட இடமில்லை என பல்வேறு குறைகளை ஊழியர்கள் முன் வைத்தனர்..

அதனை தொடர்ந்து வருங்கால வைப்பு நிதி தாம்பரம் மண்டல அலுவலக ஆணையர் ரிதேஷ் பஹ்வா உடன் ஆலோசனை நடைபெற்றது இதில் தாம்பரம் மண்டல அலுவலகத்திற்கு அனைத்து வசதிகளிளுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டப்படும் என முடிவு எடுக்கபட்டது இதனை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று புதிய கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வேன் நாராயணன் திருப்பதி உறுதி அளித்தார்

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த திருப்பதி நாராயணன் கூறும்போது

ஓய்வூதிய அறிவிப்பு, பொங்கல் பரிசு உள்ளிட்டவைகளை திமுக கவர்ச்சிகரமாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக இது போன்ற அறிவிப்புகளை வெளியிடுகிறது நான்கு ஆண்டுகளாக இதை செய்யாமல் இப்பொழுது செய்வதற்கான அவசியம் என்ன இது அடுத்து யாரு சமைப்பார்களோ அவர்களுக்கு தான் சுமையாக இருக்கப் போகிறது

இதுவரையில் பொங்கலுக்கு பரிசு தொகை வழங்காமல் இப்பொழுது வழங்குவதற்கான காரணம் என்ன இந்தியாவிலேயே அதிக கடன் சுமை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது

இது போன்ற அறிவிப்புகள் மக்கள் விரோதமானது தான் ஏனென்றால் மேலும் மேலும் செலவுகள் அதிகரிக்கும் பொழுது வரி சுமை மீண்டும் அதிகரிக்கும் திமுக ஆட்சி அமையும் பொழுதும் அனைத்து வரிகளும் கட்டணங்களும் உயர்த்தப்பட்டு விலைவாசி உயர்ந்தது அது போன்று திமுக ஆட்சியில் இருந்து விலகும் பொழுதும் விலை ஏற்றமும் வரி அதிகரிப்பு ஏற்படும்

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் தான் அதிமுக அங்கம் வகிகிறது. கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி தான் நாங்கள் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறோம் எங்கள் கூட்டணி வெற்றி பெறும் அதுதான் ஆட்சி அமைக்கும் அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை அது யார் அமைச்சரவையில் பங்கு வைப்பார்கள் என்பது தேர்தலுக்கு பிறகு தான் தெரியும் என்றார்.

உடன் பாஜக நிர்வாகிகள் விவின் பாஸ்கரன், நடராஜன், குருநாதன், சிவகலை, இராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# ஊரப்பாக்கம் ஊராட்சியில் ரூபாய் 28 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு புதிய நியாய விலை கடை திறப்பு விழா

## சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் திறந்து வைத்தார்

செங்கல்பட்டு, ஜன. 7-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊரப்பாக்கம் ஊராட்சியில் செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 28 லட்சம் மதிப்பீட்டில் அன்னை அஞ்சுகம் நகர் மற்றும் ஐயஞ்சேரி ஆகிய பகுதியில் கட்டப்பட்ட இரண்டு புதிய நியாய விலை கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் ஊராட்சி மன்ற தலைவர் பவானி கார்த்திக் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன், ஒன்றிய குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன், துணைத் தலைவர் ரேகா கார்த்திக், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பொதுமக்களுக்கு அரிசி சர்க்கரை பாமாயில் பருப்பு ஆகியவற்றை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை அமைப்பாளர் மெய்யழகன் , மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஜான்தினகரன், ஊராட்சி மன்ற உறுப்பினர் சாந்தி கார்த்திக், ஊராட்சி செயலாளர் கருணாகரன், மற்றும் வார்டு கவுன்சிலர்கள் வார்டு செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





# ஆயக்குடியில் திமுக சார்பில் அமைச்சரின் பிறந்தநாள் விழா

திண்டுக்கல், ஜன.7-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி ஒபுளாபுரம் பகுதியில் அமைந்துள்ள திமுக அலுவலகம் முன்பு தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியின் பிறந்த நாளை முன்னிட்டு பேரூர் கழகச் செயலாளர் சின்னத்துரை பேரூராட்சி தலைவர் மேனகா ஆனந்தன் துணை தலைவர் சுதாமணி கார்த்திகேயன் தலைமையில் பழனிக்கு பாதையாத்திரையாக வரும் பக்தர்களுக்கு இலவச அன்னதானம் வழங்கு விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து நடைபாதையாக வருகை தந்த இருநூறுக்கும் மேற்பட்ட பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பித்தனர்.

மேலும் மதியம் புண்ணியம் முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டன.

தொடர்ந்து அமைச்சரின் புகழ் பாடும் விதமாக பல்வேறு கோஷங்கள் எழுப்பி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் நிகழ்ச்சி கொண்டாடி மகிழ்ந்தனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மகளிர் அணி பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டு பக்தர்கள் அன்னதானம் வழங்கி சிறப்பித்தனர்...

# தாம்பரம் மாநகர இளைஞரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 250 பேருக்கு தலைக்கவசம் 330 பேருக்கு எலக்ட்ரிக் கிட்டில் வழங்கப்பட்டது

பம்மல் ஜன 7-





காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகர இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர் இளந்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 250 பேருக்கு தலைக்கவசம் 330 பேருக்கு எலக்ட்ரிக் கிட்டில் மற்றும் 8வது வட்ட இளைஞர் அணி நிர்வாகி திவாகர் அவர்களின் மனைவி புற்றுநோயால் பாதிக்கப்பட்டு காலை இழந்த வனிதா அவர்களுக்கு 50000/ நிதியுதவி, கணவரை இழந்த கழக மகளிரணி ஒருவருக்கு 2000 ரூபாய் நிதியுதவி ஆகியவற்றை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் வசந்தகுமாரி, பம்மல் தெற்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் ஜெயக்குமார், பம்மல் தெற்கு பகுதி அவைத்தலைவர் காளேஸ்வரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் பிரபு,, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தினேஷ், தகவல் தொழில்நுட்பத்துறை அமைப்பாளர் ரவிச்சந்திரன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ச.பிரபு, மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் செந்தில், ஜோஸ் பிரபு, வினோத் குமார் பம்மல் தெற்கு பகுதி அமைப்பாளர் அமிர்தராஜ், பம்மல் வடக்கு பகுதி அமைப்பாளர் பிரபு, பல்லாவரம் வடக்கு பகுதி அமைப்பாளர் சரத் வெங்கடேசன், பம்மல் தெற்கு பகுதி துணை அமைப்பாளர்கள் ராகேஷ் கௌதம், பிரசாந்த், இன்பராஜ், பல்லாவரம் வடக்கு பகுதி துணை அமைப்பாளர்கள் சதீஷ், துரை சம்பத், சீனிவாசன், பம்மல் வடக்கு பகுதி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், ஸ்டாலின், சுரேஷ், சரவணன், யுவராஜ், பல்லாவரம் தெற்கு பகுதி அமைப்பாளர் சாகுல் துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், மாமன்ற உறுப்பினர்கள்

மதினா பேகம், சத்யா மதியழகன் ,ரம்யா சத்திய பிரபு, பம்மல் தெற்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் மாதேஷ், பம்மல் தெற்கு பகுதி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அம்சவேணி, பம்மல் தெற்கு பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் அமுதா, பம்மல் தெற்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கு.அகிலன், 8வது வட்ட கழக செயலாளர் காந்தி மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்






■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே நேற்று (06.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில மாணவ, மாணவியர்கள் கானக சுற்றுலா செல்லும் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் .ஆ.புனிதா அந்தோனியம்மாள் உள்ளார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னையில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் உலகம் உங்கள் கையில் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, நேற்று முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 873 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன் (வேலூர்) வி.அமுலு விஜயன் (குடியாத்தம்), மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் மு.பாபு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூகாஞ்சனா, மாமன்ற உறுப்பினர் சுதாகர். முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் சு.ஸ்ரீதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரி பகுதியில்AICCTU சார்பாக கட்டுமான தொழிலாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் பொங்கல் போனஸ் 15,000 தமிழக அரசும் கட்டுமான தொழிலாளர் நல வாரியம் வழங்கிட கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் எம். சரோஜா விளக்க உரையாற்றினார் சி. அ. சிம்பு தேவன் மாவட்ட பொதுச்செயலாளர். எஸ். வாசுதேவன் ஏ.மாணிக்கம். ஏ. ஏழுமலை. ஏ எஸ் சங்கர். காமு. பரசுராமன். ஆர் செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.




■ வேலூர் மாவட்டம் காட்பாடிவெனிசுலா அதிபர் மதுரோவின் கைது கண்டித்து மக்கள் கலை இயக்க கழகம். மற்றும் புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணியினர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக விடுதலை சிறுத்தைகள் கட்சி காட்பாடி மாவட்டச் செயலாளர் பிலிப் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.



■ மதுரை மாவட்டம்,தோடனேரி ஊராட்சி கள்ளிக்குடி கிராமத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் தரம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.கட்டாய குளோரினேஷன் மற்றும் மேல்நிலை தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.



# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி, ஜன.7-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, அவர்கள் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 280 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, அவர்கள் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் 5 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு தலா ரூ.1,14,400 மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகளை வழங்கினார்கள்.

மேலும் நாட்டிற்காக அரும்பாடுபட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களின் நலனுக்காகவும், மறுவாழ்விற்காகவும் பயன்படுத்திட எதுவாக ஒவ்வொரு ஆண்டும் அரசால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் படைவீர் கொடிநாள் நன்கொடை வசூல் இலக்கு நிர்ணயம் செய்யப்படுகிறது. அவ்வாறு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கொடிநாள் 2023ம் ஆண்டிற்கு 07.12.2024 முதல் 06.12.2025 வரை இலக்காக ரூ.1,40,90,000 நிர்ணயம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து நமது மாவட்டம் ரூ.1,41,48,146 வசூல்புரிந்து இலக்கின் 100 சதவீதத்தினை தாண்டி வசூல் புரிந்து சாதனை படைத்தது. இதனை பாராட்டும் விதமாக அரசால் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வெள்ளி கேடயம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட வெள்ளி பதக்கத்தினை முன்னாள் படை வீரர் துணை இயக்குனர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கு.சுகிதா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் நிலம் பத்மபிரியா, துணை இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் மேஜர் ஜெயக்குமார், தனித்துணை ஆட்சியர் சமூகபாதுகாப்பு திட்டம் திரு.சேக் அப்துல் காதர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மோகனா, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.




■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மலையூர் ஊராட்சியில் பொதுப்பணித்துறையால் மாங்குளம் தூர் வாரும் பணி நடைபெற இருந்த நிலையில் அப்பகுதி விவசாயிகள் தடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி முழுமையாக தூர்வார வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் ஊர் பொதுமக்கள் கோரிக்கை

# பொங்கல் விழாவினை முன்னிட்டு, நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு வடமாடு மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி

## அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை, முழுமையாக பின்பற்றி, விழாவினை சிறப்பாக நடத்திட வேண்டும்

சிவகங்கை ஜன07-

சிவகங்கை மாவட்டத்தில் பொங்கல் விழாவினை முன்னிட்டு, நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு / வடமாடு / மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிகளை, அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை, விழாக்குழுவினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் முழுமையாக பின்பற்றுவது தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி,தலைமையில் ,நேற்று ஜன 06 மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டத்தில் ஜனவரி 2026 ஆம் மாதம் முதல் மே2026 ஆம் மாதம் வரையுள்ள காலங்களில் நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டு, வடமாடு, மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி ஆகியவைகள் குறித்து, தமிழக அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு, அதனை விழாக்குழுவினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் முறையாக பின்பற்றுதல் வேண்டும்.

ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பங்களை, அரசிற்கு அனுப்பி, பின்னரே, நிகழ்வு நடத்தப்பட அனுமதிக்க வேண்டுமென்பதால், சம்பந்தப்பட்ட நிகழ்வு நடத்தும் விழாக்குழுவினர் 30 நாட்களுக்கு முன்னதாக



குறிப்பிட்ட ஆவணங்களான ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு மனுதாரரின் கோரிக்கை மனு,

50 ரூபாய்க்கான உறுதிமொழி முத்திரை தாள் ஆவணம், ரூபாய் ஒரு கோடிக்கான காப்பீட்டுத்தொகை ஆவணம், முந்தைய ஆண்டில் ஜல்லிகட்டு நடைபெற்றமைக்கான அரசாணை, ஜல்லிக்கட்டு நடைபெறும் தளத்தின் புலப்படம், சிசிஜிகூஷி கேமரா ஜல்லிகட்டு தளத்தில் அமைக்கப்பட்டதற்கான புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் www.jallikattu.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பித்திடல் வேண்டும்.

அரசிதழில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கிராமங்களில் மட்டுமே ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி அளிக்கப்படும். ஜல்லிக்கட்டு/வடமாடு நிகழ்ச்சிகளுக்கு உரிய காப்பீடு (ரூ.1 கோடிக்கு உரிய காப்பீட்டு நிறுவனத்திடம் பெற்று அதனை விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அதில் ஏதேனும் சிரமம் இருப்பின் அதனை எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஜல்லிக்கட்டு விழா குழுவினர் விழாவிற்கான ஏற்பாடுகளை விழா நடைபெறுவதற்கு முன்னர் குறைந்தபட்சம் 24 மணி நேரத்திற்கு முன்பாக அனைத்து பணிகளையும் வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு பூர்த்தி செய்யும் பட்சத்திலேயே ஜல்லிக்கட்டு நடத்திட மாவட்ட நிர்வாகத்தால் இறுதி உத்தரவு வழங்கப்படும்.

விழா அமைப்பாளர்கள், விழாவில் பங்கேற்க உள்ள காளைகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர்களால் உரிய பரிசோதனை செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திடல் வேண்டும். ஜல்லிக்கட்டு விழாவில் பங்கேற்க உள்ள காளைகள் மற்றும் வீரர்கள் குறித்த விவரங்களை அமைப்பாளர்கள்,

முன்னரே தெரிவித்து முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். பங்கேற்பாளர்கள் குறித்த விவரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்திடல் வேண்டும்.

விழா அமைப்பாளர்கள் விழாவில் பங்கேற்க உள்ள காளைகளுக்கு எவ்விதமான ஊக்கமருந்துகளோ (Enhancment Drugs) மற்றும் எரிச்சல் அளிக்கக்கூடிய பொருட்களையோ (Irritants) செலுத்தக்கூடாது. காளைகளின் மீது ஜிகினா து◌வூதல், கண்களில் எலுமிச்சைச்சாறு பிழிதல், எண்ணெய் தடவுதல் கூடாது.

விழா அமைப்பாளர்கள், ஜல்லிக்கட்டினை திறந்த வெளியில் நடத்திடல் வேண்டும். காளைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடம் மருத்துவ பரிசோதனை செய்யும் காளை சேகரிப்பு மையம் ஆகிய இடங்களில் ஷாமியானா பந்தல் அல்லது கூரை அமைத்து காளைகளை வெயிலிருந்தும், மழையிலிருந்தும், பாதுகாத்திடல் வேண்டும். காளைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடம், காளை சேகரிப்பு மையம் மற்றும் தேவைப்படும் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு நிகழ்வுகள் அனைத்தும் கண்காணிக்கப்படும். மேலும், ஒரே தேதியில் விழா நடத்த விண்ணப்பிக்கப்படும் நேர்வில், முதல் விண்ணப்பம் மட்டும் அந்த தேதியில் நடத்திட அனுமதிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேலும், இக்கூட்டத்தில் தாங்கள் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு இருப்பின் அவை பரிசீலிக்கப்பட்டும், புதிய நடைமுறைகள் தொடர்பாக தங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்றும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த காலங்களைப் போன்று, இந்த ஆண்டும் நமது சிவகங்கை மாவட்டத்தில், அரசின் வழிகாட்டு நெறிமுறைகள முழுமையாக பின்ப ற்றி, ஜல்லிக்கட்டு / வடமாடு / மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரான்சிஸ் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) விஜயகுமார், அலுவலக மேலாளர் (குற்றவியல்) அந்தோனிராஜ், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.நந்தகோபால் உட்பட துறை சார்ந்த அலுவலகர்கள், ஜல்லிக்கட்டு / வடமாடு / மஞ்சுவிரட்டு விழாக்குழுவினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், தமுக்கத்தில் உள்ள தமிழன்னை சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி ,துணைத் தலைவர்/ இயக்குநர் மதுரை உலக தமிழ் சங்கம் முனைவர் பர்வீன் சுல்தானா , சொல்வேந்தர் சுகி.சிவம் ஆகியோர் உடன் உள்ளனர்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் விவசாயிகள் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது

திருப்பூர் ஜனவ7-

திருப்பூர் மாவட்டம் ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் நேற்று (06.01.2026) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் முன்னோடி திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச்சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, பட்டு வளர்ச்சி துறை ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்,

தேசிய தோட்டக்கலை இயக்கம், பனைமேம்பாடு திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண் நவீன மயமாக்கல் திட்டம், ஒழுங்கு முறை விற்பனைக்கூடம், உழவர் சந்தை, குளிர்பதனகிடங்குகள், நீர்பாசன மேலாண்மை நவீனமயமாக்கல் திட்டம், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பசெட் திட்டம், வேளாண் விலைபொருட்களை மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள், சொட்டு நீர் பாசனம், பயிர் சாகுபடி பரப்பளவு ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) சசிகலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



# காளையார்கோவில் வடக்கு நாட்டரசன்கோட்டை பேரூர் கிளை இளைஞரணி ஆலோசனை கூட்டம்

காளையார் கோவில் ஜன07-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க திமுகவின் இளைஞரணி கட்டமைப்புகளை பட்டி தொட்டியெங்கும் பரப்பிடும் வகையில் கிளைக்கழக இளைஞரணிகளை கட்டமைக்கப்படுகிறது...

தமிழகம் முழுவதுமே கிளை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தை வரும் வேளையில் சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு, மற்றும் நாட்டரசன் கோட்டை பேரூர்க்கழக சார்பில் கிளைக்கழக இளைஞரணி புதிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டமானது நடைபெற்றது...

காளையார்கோவில் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திதாசன் , பேரூர்க்கழக இளைஞரணி அமைப்பாளர் மோகன்ராஜ் ஆகியோரது தலைமையிலும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான எஸ். எம். மதிவாணன் , கிங் கார்த்திக் , ஒன்றிய துணை அமைப்பாளர்கள் கீரனூர் கணேசன் , இராணியூர் கர்ண. அருண்குமார் , சொக்கனாதபுரம் கோவில்பட்டி கண்ணன் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...

காளையார்கோவில் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திதாசன் , நாட்டரசன்கோட்டை பேரூர்க்கழக இளைஞரணி அமைப்பாளர் மோகன்ராஜ் ஆகியோர் வரவேற்புரையாற்றிட வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். எம். கென்னடி, பேரூர்க்கழக செயலாளர் ஜெயராமன் ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினர்...

இதில் இராணிப்பேட்டை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான பிரசாத், முரளி , சிவகங்கை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான மதிவாணன், கிங் கார்த்தி ஆகியோரும் கிளைக்கழக இளைஞரணி நிர்வாகிகளுக்கு வரவிருக்கின்ற விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற உள்ள தென் மண்டல இளைஞரணி மாநாட்டிற்கான ஒருங்கிணைப்பு பணிகளை எடுத்துக் கூறவழங்கினர்...

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் துருவம்பட்டி சுப. தமிழரசன் , கழக மூத்த முன்னோடி , பேரூர்க்கழக மேனாள் செயலாளர், மாவட்ட பிரதிநிதி ரைஸ்மில் கணேசன் , வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் கொல்லங்குடி சதீஷ்குமார், சைதை அசோக் , ஒன்றிய ஐடி விங் சுசீந்திரன் , வீராணி வழக்கறிஞர் சதீஷ் , அழகாபுரி பெருமாள் , கண்டிப்பட்டி சீனு , பில்லப்பன் உள்ளிட்ட நாட்டரசன் கோட்டை பேரூர்க்கழக, காளையார்கோவில் வடக்கு ஒன்றிய , கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# தமிழ்நாடு பத்திரிக்கை மற்றும் ஊடக பணியாளர்கள் சங்கத்தின் இருபதாவது ஆண்டு விழா

கூடுவாஞ்சேரி ஜன 7-

தொழிலாளர் நலத்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு பத்திரிக்கை மற்றும் ஊடகப் பணியாளர்கள் சங்கத்தின் இருபதாவது ஆண்டு விழா மற்றும் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரி எம் கே டி திருமண மகாலில் மாநில பொதுச் செயலாளர் முனைவர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் சங்க மாநில தலைவர் இசைக்கும்மணி அனைவரையும் வரவேற்றார்.விழாவில் மாநில முக்கிய நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, ஓய்வு பெற்ற சென்னை




உயர்நீதிமன்ற நீதிபதி கோகுல்தாஸ், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்ற தலைவர் எம்.கே.டி. கார்த்திக், நகரமன்ற துணைத் தலைவர் ஜி.கே.லோகநாதன், செங்கல்பட்டு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருக்கச்சூர் கே.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கண்டு குத்துவிளக்கேற்றி வாழ்த்துரை வழங்கினர். இதனைத் தொடர்ந்து சமூக ஆர்வலர்கள், பாஜக, விடுதலை சிறுத்தை, காங்கிரஸ், மனிதநேய மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சி .பி.ஐ.எம். எல், மதிமுக, தமிழக வெற்றி கழகம், நாம் தமிழர் கட்சி ஆகிய செங்கல்பட்டு மாவட்ட தலைவர்கள், மாவட்ட செயலாளர்களுக்கும், நந்திவரம் கூடுவாஞ் சேரி அரசியல் கட்சி நகர தலைவர்கள், நகர செயலாளர் களுக்கும் சிறப்பு விருதுகள் சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களும், நினைவுப் பரிசுகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் நல திட்ட உதவிகள் சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்பட்டன.விழாவில் சங்கத்தின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் உட்பட 500க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். விழா முடிவில் மாநில செயல் தலைவர் பா.சம்பத்குமார் நன்றி கூறினார்.

# சிவகங்கை அரசனேரி கீழமேடு திமுக வெற்றி வாக்குச்சாவடி கூட்டம்

சிவகங்கை ஜன07-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி எனும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் அரசனேரி கீழமேடு கிங் கார்த்திக் ஏற்பாட்டில் கிளைக்கழக செயலாளர் செந்தில்குமார் , மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். எம். மதிவாணன் , மாவட்ட சுற்றுசூழல் அணி திருமலை மு. குமணன் , மின்திட்ட தொமுச மின்வாரிய முருகேசன் ஆகியோரும் முன்னிலை வகித்தனர் இந்த ஆலோசனை கூட்டத்தில் சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம்




கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்...

இந்த நிகழ்ச்சியில் கிளைக்கழக செயலாளர்களான புதிய அரசு , செந்தில் குமார் , விஸ்ஸநாததாஸ் நகர் கிளைக்கழக இளைஞரணி கார்த்திக் , போஸ் ,

அரசநேரி கீழமேடு திமுக நிர்வாகிகள் திவான் , திருத்தணி , சங்கர் எம்ஜிஆர் நகர் நிர்வாகிகள் கமலஹாசன் , முத்து , சூரக்குளம் கிளைச் செயலாளர் மணி , கண்ணன் , வஸ்தாபட்டி கிளை செயலாளர் முருகன் விஸ்வநாத தாஸ் நகர் திமுக நிர்வாகி ஆனந்தன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்...

கூட்ட ஏற்பாடுகளை மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் கிங் கார்த்திக் சிறப்பாக செய்திருந்தார்.

# சீனாவை பின்னுக்கு தள்ளி அரிசி உற்பத்தியில் இந்தியா முதலிடம்

புதுடெல்லி, ஜன.7-

சீனாவை மிஞ்சி உலகின் மிகப் பெரிய அரிசி உற்பத்தி நாடாக இந்தியா மாறியுள்ளது என மத்திய வேளாண்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதிய வகை பயிர்களை வெளியிடும் நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது.

இதில் 25 பயிர்களின் 184 புதிய வகை களை அமைச்சர் சவுகான் வெளியிட்டார். இதில் 122 தானியங்கள், 24 வகை பருத்தி, 13 வகை எண்ணெய் வித்துக்கள், 11 வகை மாட்டுத் தீவனங்கள், பருப்பு மற்றும் கரும்பில் தலா 6 வகைகள், சணல் மற்றும் புகையிலையில் தலா 1 வகையையும் அவர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் பேசியதாவது: இந்த புதிய வகை வித்துக்கள், விவசாயிகளுக்கு அதிக மகசூல், அதிக வருவாய் தரக்கூடியவை. இந்த புதிய வகை பயிர்கள் விவசாயிகளிடம் விரைவில் சென்றடைவதை வேளாண் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

அரிசி உற்பத்தியில் சீனாவை மிஞ்சி இந்தியா மிகப் பெரிய நாடாக உருவெடுத்துள்ளது. கடந்த 202425ம் ஆண்டில் இந்தியா 150.18 மில்லியன் டன் அரிசி உற்பத்தி செய்தது. இதே காலத்தில் சீனாவின் அரிசி உற்பத்தி 145.28 மில்லியன் டன்களாக இருந்தன. இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தேசிய விதைகள் கார்ப்பரேஷன் (என்எஸ்சி) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மனீந்தர் கவுர் திவிவேதி, என்எஸ்சியின் கடந்தாண்டின் இறுதி ஈவுத் தொகை ரூ.33.26 கோடிக்கான காசோலையை வழங்கினார்.

# மானியம் : மதுரை மாவட்ட பயனாளிகள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் / திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாகனம் வாங்குவதை ஊக்குவித்து, அதிக வருமான ஈட்டி சுயதொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிட புதியதாக ஆட்டோ வாகனம் வாங்குவதற்கு ஆகும் செலவினத்தில் மானியமாக தலா ரூ.1,00,000/, 1000 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேற்படி திட்டத்தில் இதுவரை மதுரை மாவட்டத்தில் கடந்த 2023 முதல் தற்போதுவரை 833 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தலா ரூ.1,00,000/ வீதம் ரூ.8,33,00,000/மும், 53 திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூ.53,00,000/மும், 10 இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ.2,00,000 /மும் என மொத்தம் ரூ.88,800,000 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தொழிலாளர் நலத்துறையின் tnu-



wwb.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டிய ஆவணங்கள் :1. நலவாரிய அசல் அடையாள அட்டை, 2.ஆதார் அடையாள அட்டை (தொலைபேசி எண் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்), 3.குடும்ப அட்டை (அசல்), 4.வயது ஆவணம் (குடும்ப அட்டை / வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் /பள்ளிச்சான்று), 5.சாதி சான்றிதழ் அல்லது சுயசான்றிதழ் SC/ST மட்டும் 6.தேசியமயமாக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தகம் (அசல்), 7.நியமனதாரரின் வயது ஆவணம் (அசல்), 8.தொழிலாளியின் புகைப்படம் கையொப்பம். 8.ஆட்டோ மானியம் ஓட்டுநர் உரிமம், விலைப்புள்ளி பட்டியல், விற்பனை முகவரின் உறுதிமொழி மற்றும் பயனாளியின் உறுதிமொழி, 9. மின்சார



இருசக்கர வண்டி) e-Scooter) விலைப்புள்ளி பட்டியல்,

e-Scooter விற்பனை முகவரின் உறுதிமொழி மற்றும் பயனாளியின் உறுதிமொழி போன்ற ஆவணங்களை tnu-wwb.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற திருநங்கை ருத்ரா அவர்கள் தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் ருத்ரா. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 இலட்சம் மானியத்தில் திருநங்கைகளுக்கு ஆட்டோ வழங்கியது சந்தோஷமாக இருக்கிறது. வீட்டிலிருந்து புறக்கணிக்கப்பட்டு வெளியில் வந்த எங்களுக்கு தன்னம்பிக்கையுடன் ஆட்டோ வழங்கியது சந்தோஷமாக உள்ளது. நாங்கள் சுயமாக சம்பாதித்து சுயமாக உழைப்பதற்கு இது எங்களை ஊக்கப்படுத்துகிறது என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி உமா அவர்கள் தெரிவிக்கையில்,

எனது பெயர் உமா, நாங்கள் ஊமச்சிகுளத்தில் வசித்து வருகிறேன். என் கணவரும், நானும் ஆட்டோ ஓட்டுநர்கள். அவர் வாடகை ஆட்டோ தான் ஓட்டி வருகிறார். வாடகை கொடுத்து எங்களால் குடும்ப கஷ்டத்திலிருந்து மீண்டு வர முடியவில்லை. அது தொடர்பாக தொழிலாளர் துறை அலுவலகத்திற்கு சென்று ஆட்டோ மானியம் திட்டம் குறித்து அறிந்து கொண்டோம். அலுவலர்கள் அனைவரும் எனக்கு நன்றாக உதவியதன் மூலமாக பதிவு செய்தேன். அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 1 இலட்சம் மானியத்தில் ஆட்டோ வழங்கியது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சொந்த ஆட்டோவால் எங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திடுவோம். இத்தகைய உதவிபுரிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி ஷேக் முகம்மது அவர்கள் தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் ஷேக் முகம்மது, நான் எம்.பி.ஏ படித்து வருகிறேன். அதே நேரத்தில் டெலிவரி வேலை செய்து வருகிறேன். டெலிவரி வேலை செய்வதால் மாதம் மாதம் ரூ.4000 முதல் 5000 வரை பெட்ரோல் போடுவதற்கு செலவாகிறது. இணையம் சார்ந்து டெலிவரி செய்பவர்கள் என்ற அடிப்படையில் ரூ.20,000/ மானியம் பெற்றுள்ளேன். நான் புதிய இஸ்கூட்டர் வாங்க இந்த மானியத்தொகை மிகவும் உதவிகரமாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரங்களால் சாவியை பெற்றதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனவே இத்தகைய உதவி செய்த தமிழ்நாடு அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161